**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 244 OF 2024** |
| Deposition of witness | : | **PW - 4** |
| Name | : | கோபாலகிருஷ்ணன் |
| Father Name | : | பரமசிவம் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **38** |

**All accused present through hybrid mode**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 28.01.2025.

முதல் விசாரணை தொடர்ச்சி

5. எதிரி சிவகுருவிடம் ஒப்புதல் வாசல் மூலம் பெற்ற பின்பு எதிரி ராஜாவிடம் மதியம் 03.45 மணி அளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். ராஜா தான் பல்வேறு இடங்களில் திருடியதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடமும் ராஜாவிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக ராஜா எடுத்து ஆஜர் செய்த மூன்று பவுன் செயின், இரண்டு பவுன் தங்க பிரேஸ்லெட் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலீசார் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் இரவு சுமார் 07.15 மணியளவில் எதிரி சுரேஷிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக எதிரி சுரேஷ் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த தலா கால் பவுன் எடை கொண்ட இரண்டு ஜோடி தங்க காதனிகளை கைப்பற்றுதல் மகஜரில் போலீசார் கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும்

எதிரிகள் சிவகுரு, ராஜா, சுரேஷ் மற்றும் தங்கராஜ் ஆகியோரது தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள **1** வது கையொப்பம் என்னுடையது தான்**.** அந்த கையொப்பம் மேற்படி கையொப்பங்கள் முறையே அ**.**சா**.**ஆ**.11** முதல் அ**.**சா**.**ஆ**.14** வரை குறியீடு செய்யப்படுகிறது**).**

6. பின்னர் இரவு 10.00 மணி அளவில் எதிரி தங்கராஜிடம் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்னிட்டு போலீசார் கைது செய்த எதிரிகளை காவல் நிலையம் அழைத்துச் சென்றார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரிகளின் தரப்பில் நேராமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.01.28 18:26:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)